# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,408 — 1938 ம் ௵ ஐப்பசி௴ 28 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


# Part IV.—நான்காம் பாகம்.

## அரசாட்சியாரின் விளம்பரம்.

**L. D.—B 269/31**

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைகளைப் பற்றிய சட்டம்.**

*கதிர்காம இல்மகாகச்சித் (திருக்கார்த்திகைத்) திருவிழாப் பிரமாணங்கள்.*

**1896** ம் ஆண்டின் **13** ம் இலக்க "ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய ஒரு சட்டம்" என்னும் மகுடா நாமமுடைய சட்டத்தின் **1** ம் பிரிவின் கீழ் தேசாதிபதி பெற்ற அதிகாரத்தைக்கொண்டும், **1931** ம் ஆண்டின் இலங்கை அரசியல் மன்றத்தின் (இராச்சிய மந்திர சபையின்) கட்டளை யின் **93** ம் பிரிவின்கீழ் உள்ள அதிகாரத்தைக்கொண்டும், இலங்கை அரசாங்கத்தை நடத்தும் அதிகாரனாகிய கை ஸ்ரான்லி ஊட்மன் ஆகிய நான், வழக்கம்போல் **1938** ம் ஆண்டு டிசம்பர் மாசத்தில் (மார்கழி)௴ தொடங்கி நடக்கும் இல்மகாகச்சித் திருவிழாவை எதிர்நோக்கி, இந்த விளம்பரத்தினால் கீழ்காட்டப்படும் பிரமாணங்களை ஆக்குகின்றேன்.

ஜீ. எஸ். ஊட்மன்,
இலங்கை அரசாங்கத்தை நடத்தும் அதிகாரி.

கொழும்பு, 1938 ம் ஆண்டு ஐப்பசி௴ 22 ந் ௳.

பிரமாணங்கள்.

1. இப்பிரமாணங்களில், "பாடி எல்லை" என்பது பின்வரும் எல்லைக் குள் உள்ள இடங்களைத் தன்னுள் அடக்கும் :—

(அ) கதிர்காம மகா தேவாலயத்திலிருந்து அரை மைல் சுற்றள விற்குள் உள்ள இடங்களையும்,

(ஆ) செல்லக் கதிர்காமப் பிள்ளையார் கோவிலிலிருந்து கால் மைல் சுற்றளவிற்குள் உள்ள இடங்களையும் ஆகும்.

2. (அ) 1938 ம் ஆண்டு இல்மகாகச்சித் திருவிழா நடக்கும் நாட் களும், யாத்திரிகர் கதிர்காமத்தில் தங்கிநிற்கும் நாட்களும் டிசம்பர்௴ 5 ந் திகதி தொடங்கி 7 ந் திகதி வரையுள்ள இவ்விரண்டு நாட்களு முட்பட உள்ள மூன்று நாட்கள் மாத்திரமே.

(ஆ) ஒரு யாத்திரிகனாவது டிசம்பர் மாசம் 5 ம் நாளுக்குமுன் பாடி எல்லைக்குள் வந்துசேரக்கூடாது. 7 ம் நாளுக்குப்பின் அவ்வெல்லைக்குள் தங்கி நிற்கக்கூடாது.

3. பாடிஎல்லை பொதுவாக ஊவா மாகாண அரசாங்க ஏஜண்டரின் அதிகாரத்துள்ளும் "மேற்பார்வையாளர்" என்று பெயர் பெற்று நியமிக்கப்பெறும் உத்தியோகத்தரதும், அவருக்குதவிபுரியும் வைத்தி யரும், பாடிக்காவலுக்குரிய பொலீஸ் தலைவரும் ஆகியவர்களதும் நேர் அதிகாரத்தின்கீழும் இருக்கும்.

4. (1) மேற்பார்வையாளர் கதிர்காமத்திற்குப்போகும் பயண வழி யிலும் திரும்பிவரும் பயணவழியிலும் அதிகாரஞ் செலுத்திப் பின் வருவனவற்றைச் செய்ய உரிமையுடையர் :—

(அ) தான் குறிப்பிட்ட இடங்களை மாத்திரமே கழுவவும், நீராடவும், குடிக்கத் தண்ணீர் எடுக்கவும், மலசலங்கழிக்கவும் உபயோ கிக்கலாமென்று இடம் நியமனஞ்செய்யவும்.

(ஆ) ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள யாத்திரிகருந் தங்க வெவ்வே றிடம் நியமிக்கவும்.

(இ) எக்கூட்ட யாத்திரிகராயினும் போவதற்கு வழிநியமித்து அவ் வழியாற் போகச்செய்யவும்.

(ஈ) யாத்திரிகருக்குக் கொடுக்கப்படும் ஊண் பகிரப்படுத்தலைப் பார்த்து நடத்தவும்.

(உ) நோய் அடையும் யாத்திரிகர் தங்கத் தனியிடங்களை நியமிக்கவும், மற்றவர்கள் அவர்களுடன் கலவாது தடுக்கவும், பயணஞ் செய்யத் தகாதவர்களாய் அந்நோயாளிகளிருந்தால் தடுத்து வைத்திருக்கவும் (உரிமையுடையர்).

(2). ஒரு ஆளாவது மேற்பார்வையாளர் மேலே (1) இலக்கமிடப்பட்ட பிரமாணத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களுக்கு இடும் நீதியான கட்டளையை மீறக்கூடாது.

5. யாராயினும் பாடியெல்லைக்குள், அரசாட்சி ஏஜண்டரால் அல்லது அவருடைய உத்தரவுடன் இத்தேவைக்கென்று அமைக்கப்பட்ட இடத்தி லன்றி வேறிடத்தில் மலசலங்கழிக்கக்கூடாது.

6. யாராயினும் திரவமானவோ அல்லது கெட்டியானவோ எவ்வித மான கழிவு பொருளையும் பாடியெல்லைக்குட்பட்ட இடங்களில் இதற் கென்று அரசாட்சி ஏஜண்டரால் அமைக்கப்பட்ட அல்லது அவருடைய உத்தரவுடன் அமைத்த இடம் அல்லது கலத்திலன்றிப் போடக்கூடாது.

7. யாராயினும், பாடியெல்லைக்குட்பட்ட இடத்தில் மேற்பார்வை யாளராற் கட்டளையிடப்பட்ட தலத்திற்கு மேலே, கங்கையில் குளிக்க வாவது இறங்கவாவது கூடாது.

8. மாடுகளை அல்லது வண்டி மாடுகளை மேற்பார்வையாளர் அல்லது அவராற் கட்டளைபெற்ற இன்னொருவர் கொடுத்த உத்தரவுச் சீட்டில்லாமல் பாடியெல்லையிலிருந்து காற் கட்டைக்குள் கொண்டுவரக்கூடாது.

9. 8 ம் பிரமாணத்தின்கீழ் கொடுக்கும் ஒவ்வொரு உத்தரவுச் சீட்டும், பாடியின் சுகாதாரத்தையும் சனங்களின் சுகத்தையும் காப் பாற்றும் விஷயமாகவும், பாடி யெல்லைக்குள் போக்குவரவை அடக்கி நடத்தும் விஷயமாகவும் மேற்பார்வையாளரால் இடப்படும் விதிவிலக்கு களுக்குட்படும்.

10. அரசாட்சி ஏஜண்டரிடமிருந்து இதற்கென்று உத்தரவுச்சீட்டுப் பெற்ருலல்லது, ரொட்டி சுடும் கடையாவது, சோடாச் செய்யும் தொழிற் சாலையாவது, தேநீர் அல்லது கோப்பிநீர்க் கடையாவது, சாப்பாட்டுக் கடையாவது, காலையாவது பாடியெல்லைக்குள் அமைக்கக்கூடாது. உத்த ரவுச் சீட்டுப் பணமின்றி இனமாகக் கிடைக்கும்.

11. (1) எவ்விதமாகவாவது விபரிக்கக்கூடிய எப்பொருளையாவது பாடியெல்லைக்குள் மேற்பார்வையாளரால் இதற்கென்று நியமிக்கப் படாத இடத்தில் விற்பனைக்கு வைத்திருக்கக்கூடாது.

(2) மேற்பார்வையாளர் அல்லது வைத்திய உத்தியோகத்தர் சுகத்திற் கேற்காதென்று விலக்கிய, அல்லது இவர்களில்லாத நேரம் பொலீஸ் தலைவர் விலக்கிய உணவுப்பண்டத்தை யாரும் விற்கக்கூடாது.

(3) மேற்பார்வையாளர் அல்லது வைத்தியர் அல்லது இவர்களில்லா நேரம் பொலீஸ் தலைவர் உண்ண ஏற்காதென்று தள்ளும் உணவு பொருளை பறித்து அழிவுசெய்வது எந்தப் பொலீஸ் வேலைகாரருக்கோ அல்லது சுகாதார சோதனைகாரருக்கோ நீதிக்குட்பட்ட செய்கையாகும்.

12. (1) எல்லாச் சாப்பாட்டுக் கடைகளும், தேநீர், கோப்பிநீர்க் கடைகளும் சுத்தமாகவும் சுகாதாரத்துக்கேற்ற முறையிலும் இருக்க வேண்டும்.

(2) எல்லா பலகாரங்கள், இனிப்புப்பண்டங்கள், சமைத்த உணவுப் பொருட்கள், விற்பனைக்கென்று வெளியில் வைப்பன, தகுதியாயமைத்த ஈ நுழையாத கண்ணுடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும்.

(3) கழிவு தேயிலையோ, கோப்பியோ, பாலோ, உணவுக்கழிவோ சமையற்கழிபொருளோ அல்லது வேறெவ்வித கழிவுபொருளோ நிலத் தில் எறியக்கூடாது. இவ்வித எல்லாக் கழிவு பொருட்களும் கீழ் விபரிக்கும் விதமான கொள்கலத்தில் (பெட்டியில்) சேர்த்துவைத்து எந்த நேரத்திலும் சுகாதாரப் பகுதியாரால் அப்புறப்படுத்தப்பட ஆயத்த மாயிருக்க வேண்டும்.

(4) விற்பனைக்கோ, அல்லது வியாபாரஞ்செய்வதற்கோ உபயோகிக்கப் படும் ஒவ்வொரு கட்டடமும், கொட்டிலும், இடமும் லோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்டு 4½ கனஅடிக்குமேல் உள்ளிடமுள்ள ஊத்தைக் கொள்கலமுடையதாயிருக்க வேண்டும். இந்தக் கட்டடம், கொட்டில், அல்லது இடத்தில் சேரும் கழிவு பொருட்கள் சொல்லப்பட்ட ஊத்தைக் கொள்கலத்தில் இடப்பட்டு, ஊத்தைப் பொருள் உள்போட அல்லது வெளியில் எடுக்கத் திறக்கும் நேரமல்லா மற்று நேரமெல்லாம், லோகம் அல்லது மரமூடியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

13. எவ்வித தொற்றும், அல்லது பரவும் வியாதியுடைய யாரை யாவது பாடி எல்லைக்குள் ஒருவரும் அழைத்துவரக்கூடாது, அல்லது பாடி எல்லைக்குள் நுழைய உதவிசெய்யவோ நுழையும்போது ஒத் துழைக்கவோ கூடாது.

14. திருவிழா காலத்தில், பாடியிடத்தில் ஏதும் தொற்று நோய் உண்டுபடின், அரசாட்சி ஏஜண்டர் யாத்திரையாளரை பாடியிடத்தி லிருந்து விலகும்படி கட்டளையிடவும் விலகி வெளிப்போகும் வழியைக் குறித்துக்காட்டவும், திரும்பிப்போக உபயோகிக்கும் வாகனத்தையும், போகும் முறையையும் குறிப்பிட்டுக் கட்டுப்படுத்தவும் நீதிக்குட்பட்ட அதிகாரமுடையர்.

15. பாடியிடத்தில் இருப்பவர்களில் தொற்றும் அல்லது பரவும் நோய் உண்டாகும் ஒவ்வொருவரும் அன்றியும் தொற்றும் அல்லது பரவும் நோயுள்ளவரென்று அறியப்பட்ட ஒருவருடன் கூட இருந்த ஒவ்வொருவரும் இதனைப் பாடித் தலைவராயுள்ள வைத்திய உத்தியோ கத்தருக் கறிவிக்கக் கடமைப்பட்டவராவர்.

16. அரசாங்க ஏஜண்டருடைய முன்னுத்தரவின்றி பாடி எல்லைக்குள் தெருவாகப் பாவிக்கப்பட்டோ அல்லது தெருவிற்கென்று ஒத்திவைக்கப் பட்டோ இருக்கும் நிலத்தில் யாராவது கடை கட்டவோ அல்லது அந் நிலத்தின் பகுதி சேரக் கட்டடத்தைப் பருப்பித்துக் கட்டவோ கூடாது.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,919 (அம்பாந்தோட்டை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் உரித்துண்டென்று தமக்கு 1938ம் ஞூ( ஒக்ற்றோபர்) ஐப்பசிமீ 28ந் தேதி யிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்ட வருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணி யுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக் குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத் திற் செய்யவேண்டியன்செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின் றது.

1938 ம் ஞூ (ஒக்ற்றோபர்) ஐப்பசிமீ 3 ந் தேதியிலன்று அம்பாந் தோட்டைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. ஹொல்ம்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, அம்பாந்தோட்டை.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் அம்பாந்தோட்டை உதவி அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிட மும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

**(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித் துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட்குட்பட விருக்குங் காணித்துண்டெதுவாயினும் மேற்படி யறிவித்த லின்கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாததுமன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டிய தில்லை.**

அட்டவணை.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக், மாகம்பற்றுவில் கிறின்ற பொலிஸ் ஒப்பீசரின் பிரிவில் பலற்றுப்பான என்னும் கிரா மத்திலுள்ள கீழ்க்ககாணுங் காணித்துண்டுகள் :—

எல்லைகளாவன : வடக்கு-முடுவிஹாறவெத்த அல்லது மகுல்மஹா விஹாறகெலே முடிக்குரிய துண்டுகள் (2 எப். ரீ. பீ. 77 ம் 78 ம் துண்டு கள்) ; கிழக்கு-ஜம்புறுகலவெந்த, உவெலிப்பொட்டேவல, பலற்றுப்பான கொடக்கெலே அல்லது கொடக்கலப்புவகொடக்கெலே எல்லாம் முடிக் குரியது (2 எப் ரீ. பீ. 78ம் 79 ம் துண்டுகள்), மேற்சொன்னதும் கடலும் ; தெற்கு-பலற்றுப்பானகொடகெலே அல்லது கொடேகலப்புவாகொடக் கெலே (2 எப். ரீ. பீ. 79 ம் துண்டு) முத்துக்கலலேவாயேகெலே (2 எப். ரீ. பீ. 77 ம் துண்டு) மஹாடியாவுன்வல உப்பாற்றுக்கு நியமித்துவைத்த துண்டும் (கட்லைவிட்டு மற்றவை) முடிக்குரியன ; மேற்கு-மூற்றுகலே வாயேகெலே, வம்போவகெலே, முடிவிஹாறவத்தையும் எல்லாம் முடிக் குரியன (எப். ரீ. பீ. 2 துண்டு 77).

தொப்போ பி. பிளான் நம்பர் 5.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | பாலுகஸ்வல .. .. .. | 0 | 0 | 22 |
| 2 | மறலாவெவ .. .. .. | 0 | 3 | 25 |
| 3 | ஜம்புறுகலவத்த, முடுவிஹாறவெத்த, மகுல்மஹா விஹாறகெலே வெம்புபாவக்கெலே, பலற்றுப்பான கொடக்கெலே .. .. .. | 2,474 | 3 | 2 |
| 4 | ஜம்புறுகலவெத்த, முடுவிஹாறவெத்த, மகுல்மஹா விஹாறகெலே .. .. .. | 418 | 1 | 35 |
| 5 | முடுவிஹாறகெலே அல்லது மகுல்மஹாவிஹாறகெலே | 35 | 0 | 18 |
| 6 | ஷெ .. .. .. | 3 | 3 | 37 |
| 7 | ஷெ .. .. .. | 9 | 2 | 1 |
| 8 | வெம்போவக்கெலே அல்லது பலற்றுப்பானஉடவெவ | 38 | 3 | 12 |
| 9 | பலற்றுப்பானஉடவெவ .. .. | 2 | 3 | 34 |
| 10 | றுடவெற்றியவெவ .. .. | 1 | 0 | 19 |
| 11 | பலற்றுப்பானகொடகெலே .. .. | 82 | 1 | 19 |
| 12 | பலற்றுப்பானகொட .. .. | 2 | 2 | 18 |
| 13 | ஷெ .. .. .. | 0 | 0 | 6 |
| 14 | பலற்றுப்பானகொடேவத்த .. .. | 0 | 1 | 31 |
| 15 | முறப்பெலேவத்தை .. .. | 0 | 1 | 4 |
| 16 | பலற்றுப்பானகொட .. .. | 0 | 0. | 5 |
| 17 | பலற்றுப்பானகொடவத்தை .. .. | 0 | 1 | 1 |
| 18 | ஷெ .. .. .. | 0 | 3 | 23 |
| 19 | ஷெ .. .. .. | 0 | 0 | 36 |
| 20 | பலற்றுப்பானகொடெகால .. .. | 0 | 2 | 14 |
| 22 | பலற்றுப்பானகொட .. .. | 0 | 0 | 4 |
| 23 | வன்கலாவேவத்தை .. .. | 2 | 0 | 3 |
| 24 | பலற்றுப்பானகொடகெலே அல்லது கொடக்கலப்பு வாகொடகெலே .. .. | 12 | 2 | 29 |
| 25 | பலற்றுப்பானகொடக்கெலே அல்லது கொடக்கலப்பு வாக்கொடக்கெலேயும் பொறலுஒடெக்கேலெயும் .. | 78 | 1 | 0 |
| 26 | பலற்றுப்பானவெவ .. .. | 20 | 3 | 30 |
| 27 | பலற்றுப்பானகொடவெவகும்புற .. .. | 7 | 3 | 29 |
| 28 | பலற்றுப்பானகொடேலேவாய அல்லது கொடக்கலப்புவா | 142 | 1 | 3 |
| 29 | பெப்பரியவெக்கட .. .. | 0 | 2 | 17 |
| 30 | வொம்போவக்கெல, பலற்றுப்பானகொடக்கெலே, முத் துக்கலவெவாயகெலே .. .. | 29 | 0 | 22 |
| 31 | கெரிமஸ்பொக்குன .. .. | 1 | 0 | 5 |
| 32 | கெரிமஸ்பொக்குனகெலே .. .. | 5 | 0 | 38 |
| 33 | டெவறகஸ்வல .. .. .. | 0 | 2 | 8 |
| 34 | முத்துக்கலவெவயாகெலே .. .. | 26 | 1 | 6 |
| 35 | முத்துக்கவலேவாய .. .. | 24 | 3 | 16 |
| 36 | முத்துக்கலவாயகெலே அல்லது துன்னேடமுல்ல .. | 24 | 2 | 38 |
| 37 | குடாடியாவுன்வலகெலே .. .. | 13 | 2 | 31 |
| 38 | குடாடியாவுன்வல .. .. | 5 | 3 | 8 |
| | .. | 4,369 | 2 | 9 |

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ரல்வத்த சிறுவெள்ளத்தடை முகாந்திறத்திற்கு மோதி அணையுடன் ஓர் சிலுயிஸ் கட்டுவதற்கும் எல்லை இருக்குமிடதிலிருந்து இடம் மாற்றுவதற்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப் படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 904. குறிச்சி—ரல்வத்தவும் கோணவளவும்.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மொறகஹவத்தவும் பற்ற டொம்பகஹவத்தவும் .. | தோட்டம், 30 வருஷஞ்சென்ற 1 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 1 பெல்லிமரமும் வண்டிற் பாதையின் பகுதியுமுள்ளது | மெறன்னகே சிமியோன் கொஸ்ரா, கோனவல.. | 0 | 1 | 0·8 |
| 2 | பற்றடோம்பகஹவத்த .. | தோட்டம், 10 வருஷஞ்சென்ற 2 கமுகுவும் வண்டிற்பாதையின் பகுதியுமுள்ளது .. | கங்காரத்தின முதியான்சேலாகே ஜுவான் பெறேரு, மேற்படி ஹேகஸ்பெறேரு, மேற்படி நிக்குலஸ் பெறேரு, மேற்படி மேறியா பெறேற, மேற்படி றன்சோபெறேரு, மேற்படி மாத்தா பெறேரு, மேற்படி ஜேன் பெறேரு, கறவித்தகே சோபியான அல்விஸ், எல்லோரும் கொனவல | 0 | 0 | 37·1 |
| 5 | கோங்கஹவத்த .. | வெறுங்காணி .. .. | அத்தாண்ட ஆராச்சிகே டொன் சைமன் அப்புஹாமி, ரல்வத்த | 0 | 0 | 19·1 |
| 6 | புகுவல்ஒவிற்ற .. | வெறுங்காணி அணையின் பகுதியுள்ளது .. | டி. ஜே. ஜயக்கொடியின் நோனு, பலகல்ல .. | 0 | 0 | 19·8 |
| 7 | எகெற்றுகஹவத்த .. | 30 வருஷஞ்சென்ற தோட்டம், மரமில்லை ஒரு அணையின் பகுதியுள்ளது | கென ஆராச்சிகே சிங்கோ றெட்டிறிகோ, ஹுனுகம | 0 | 0 | 4·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஞூ (நவம்பர்) கார்த்திகைமீ 28 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு இந்தக்கந்தோரில் என்முன்பாகவெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1938 ம் ஞூ (ஒக்றறேபர்) ஐப்பசிமீ 25 ந் உ.

சீ. ஈ. டில்னி.
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வக்கல மோடரயில் பாலமும் கதவும் கட்ட காணி வாங்கல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 645. குறிச்சி—யட்டகம.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்டவத்திஅத்தற .. | தென்னந்தோட்டம், 40 வயதுள்ள 4 தென்னைகளுண்டு | ஏ. ஏ. வீரசிங்ஹ ஹினெட்டிகல குடி | 0 | 0 | 2·19 |
| 2 | அகலஅத்தறகும்புற .. | வெண்தரை .. .. .. | சீ. டி. எஸ். விக்கிரமசிங்ஹ, யட்டகம குடி | 0 | 0 | 2·49 |
| 3 | கலகாவஒவிற்ற .. | வெண்தரை .. .. .. | ஷெ .. | 0 | 0 | 1·95 |
| 4 | கிராலகஹஒவிற்ற அல்லது கடாவள | தென்னந்தோட்டம், 20 வயதுள்ள ஒரு தென்னையுண்டு | ஏ. டி. பறணவிதான, மெற்றம்ப குடி | 0 | 0 | 1·47 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய எழுத்திலதிகரிக்கப்பட்ட காரியகாரர்மூலமாய் 1938 ம் ஞூ (நவம்பர்) கார்த்திகைமீ 29 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமகக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1938 ம் ஞூ (ஒக்றறேபர்) ஐப்பசிமீ 25 ந் உ.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிப்பக்கந்தையில் ஓர் பாடசாலைக்குக் காணி வாங்குதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 154. குறிச்சி—கிப்பக்கந்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ருக்மல்கஹவத்தை அல்லது டுவேவத்தை .. | தென்னந்தோட்டம், 75 வயதிற்குக்கூடிய 18 தென்னைகளும், 100 வயதுவரையுள்ள ஒரு பலாவும், 75 வயதிற்கு மேற்பட்ட ஒரு மாவும், ஓர் வேயப்பெற்ற பாடசாலைக் கட்டடமும், மட்சுவருள்ள ஓர் மலக்கூடமும், ஓர் திறப்பான கிணறும் | (1) ஸ்ரீ. சேமரத்தின தேரோ, கிப்பக் கந்தைக்குடி, (2) ஜீ. ஆர்தர் டீ. சொயிசா, கருமுனி வளவ்வ, பலப்பிட்டிய | 0 | 3 | 19·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய எழுத்திலதிகரிக்கப்பட்ட காரியகாரர்மூலமாய் 1938 ம் ஞூ (டிசம்பர்) மார்கழிமீ 6 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு உறகஹ வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1938 ம் ஞூ (ஒக்றறேபர்) ஐப்பசிமீ 25 ந் உ

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் திரிகோணமலை உதவி மாகாணப் பதிவுகாரரின் கந்தோருக்கும் காணிப் பதிவுகாரரின் கந்தோருக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. : A 304. குறிச்சி—திரிகோணமலை 1 ம் நம்பர் நகரசங்க எல்கைக்குட்பட்டது.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | காத்தவராயர் வளவு, 202 ம் முகட்டுவரி நம்பரில் ஒரு பகுதி | 22 தென்னமரங்களும், 16 பனைமரங்களும், 1 மாமரமும், 35 வருஷஞ்சென்ற ஒரு வேப்பமரமும், 5 வருஷஞ்சென்ற ஒரு இணல்வாகை மரமும், கூரையில்லாத உறுதியான கற்சுவருள்ள சைவ ஆலயமுமுள்ள தோட்டம் | கொழும்பு யூனியன் பிளேஸ் வை. டபிள்யு. சீ. ஏ. இல் இருக்கும், எம். ஏ. வெஸ்றலன்டின் மனைவி | 0 | 2 | 25·38 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ௵ (நவம்பர்) கார்த்திகைமீ 29 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு திரிகோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1938 ம் ௵ (ஒக்ற்றோபர்) ஐப்பசிமீ 22 ந் உ.

சீ. ஜே. டேன் லேங்றி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாதம்பே சுகாதார சங்க எல்லைகளுக்குள் புதிய றேட்டுகளும் கான்களும் திறத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 273. குறிச்சி—மாதம்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 62 | நாசொமையாகே இடம அல்லது டங்கஹவத்தை 477 ம் இலக்கக் வரிகட்டும் காணியின் பாகம் | 50, 55 வயதுள்ள 2 தென்னைகள் .. | பற்றியாகம குடி ஜே. டி. போர்லொன் ரிஹைமி | 0 | 0 | 1·55 |
| 63 | மைலகஹவத்தை-வரிகட்டும் 483 ம் இலக்கக் காணியின் பாகம் | 50, 55 வயதுள்ள 3 தென்னைகள் .. | பற்றியாகம குடி. ஜே. ஏ. வார்லி யானு | 0 | 0 | 3·35 |
| 64 | அம்பகஹவத்தை-வரிகட்டும் 482A ம் இலக்கக் காணியின் பாகம் | 35, 40 வயதுள்ள 1 தென்னை .. | பற்றியாகமகுடி, பபிலினு விஜயசிங்ஹ | 0 | 0 | 0·80 |
| 65 | அம்பகஹவத்தை-வரிகட்டும் 482 ம் இலக்கக் காணியின் பாகம் | தோட்டம் .. .. | பற்றியாகம குடி மார்த்தேலிஸ் பெறேரு | 0 | 0 | 1·02 |
| 66 | அம்பகஹவ்த்தை-வரிகட்டும் 482A ம் இலக்கக் காணியின் பாகம் | 50, 55 வயதுள்ள 3 தென்னைகள் .. | பற்றியாகம குடி பபிலினு விஜயசிங்ஹ | 0 | 0 | 1·12 |
| 67 | டங்கஹவத்தை அல்லது நாச்சொமையாகேஇடம -வரிகட்டும் 477 ம் இலக்கக் காணியின் பாகம் | 45, 50 வயதுள்ள 5 தென்னைகள் .. | பற்றியாகம குடி ஜே. டி. போர்லோன் ரிஹைமி | 0 | 0 | 3·47 |
| 68 | கொஸ்வத்தை அல்லது புலுகஹவத்தை-வரிகட்டும் 481 ம் இலக்கக் காணியின் பாகம் .. | (1) 15 வயதுள்ள 1 தென்னையும், (2) 50, 55 வயதுள்ள 8 தென்னைகளும், (3) 6 கமுகளும் | மாதம்பே குடி எஸ். கே. ஆர் எம். செல்லப்பாச் செட்டி | 0 | 0 | 3·27 |
| 69 | மடத்தியாகஹவத்தை-வரிகட்டும் 480 ம் இலக்கக் காணியின் பாகம் | 50, 55 வயதுள்ள 5 தென்னைகள் .. | இஹலகம குடி மோட் ஜயவர்டன (பெண்) | 0 | 0 | 10·82 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை அட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ௵ (டிசம்பர்) மார்கழிமீ 6 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு மாதம்பே கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1938 ம் ௵ (ஒக்ற்றோபர்) ஐப்பசிமீ 24 ந் உ.

ஜே. லைட்,
உதவி அரசாட்சி ஏசண்டு, புத்தளம்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கடற்கரையிலிருந்து சலாப களப்புக்கு றேட்டு அமைத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 565. குறிச்சி—வெலிஹேனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெலிஹேனவத்தை .. | 25–40 வருஷ 11 தென்னைகளுள்ள தோட்டம் .. | சலாபக் குடி, மிஹிந்துகுலசூரிய பேதுரு மாட்டினு பறனுந்து | 0 | 0 | 20·5 |
| 2 | வெலிஹேனத் தோட்டம் | 20–25 வயதுள்ள 11 தென்னைகளுள்ள தோட்டம் .. | கொழும்பு, மக்கார்த்தி றேட்டுக்குடி, அலன் றிபோக் | 0 | 1 | 8·1 |
| 3 | ஷை .. | தோட்டம் .. .. .. | ஷை .. .. | 0 | 0 | 3·7 |
| 4 | இந்திபிற்றியாலம்ப .. | 8 மாசத்து 10 தென்னம்பிள்ளைகளுள்ள தோட்டம் .. | சலாபக்குடி, பிலிப்பு மார்க்கு .. | 0 | 0 | 9·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ௵ (டிசெம்பர்) மார்கழிமீ 7 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு சலாபக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1938 ம் ௵ ((ஒக்ற்றோபர்) ஐப்பசிமீ 24 ந் உ.

ஜே. லைட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## நகரசங்க அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

### அனுராசபுர நகரசங்கத் தெரிவு.

இத்தாற் சகலருமறிவது, 1938 ம் ஆண்டு கார்த்திகைமீ 28 ந் திகதி, திங்கட்கிழமை, 1939, 1940, 1941 ம் ஆண்டுகளுக்கு அனுராசபுர நகர சங்கத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யப்படும். அங்கத்தவர் பதவியை வேண்டும் ஒவ்வொரு விண்ணப்பக்காரனும், எழுத்துமூலம் நியோகிக்கப்பட வேண்டும். எத்தெரிவுப்பகுதிக்கு அங்கத்தவராய் விண்ணப்பித்து நிற்கின்ருரோ அப்பகுதித் தெரிவு டாப்பில் காணப்படும் போவழிகாரரில் குறைந்த பட்சம் இருவராகுதல் நியமனப்பத்திரத்திற் கைச்சாத்திட வேண்டும். 1938 ம் ஆண்டு கார்த்திகைமீ 28 ந் திகதி, திங்கட்கிழமை காலை 11 மணிக்கு முன்பதாக, நியமனப்பத்திரம் நகர சங்க கந்தோரில் கொடுக்கப்படல் வேண்டும். இத்திகதியே இதற்கெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

2. எப்பகுதிக்கேனும் ஒன்றுக்கு மேற்பட்ட தொகையினர் அங்கத்தவராய் நியோகிக்கப்பட்டால், கீழே காட்டப்பட்டிருக்கு மிடங்களிற் குறிக்கப்பட்ட நேரத்தில் சம்மதச்சீட்டுப் பெறப்படும். சம்மசீட்டுக் கொடுத்தல் காலை 8 மணிதொடக்கம் நடுப்பகல் 12 மணிவரையும், பின்னேரம் 1 மணிதொடக்கம் 3 மணிவரையும் நடைபெறும்.

| | பிரிவு. | சம்மதங் கொடுக்குந் திகதி. | சம்மதங் கொடுக்கும் இடம். |
|---|---|---|---|
| 1. | நுவரைப்பகுதி .. | 10-12-38 .. | மஹிந்த வித்தியாசாலை, நுவரை, அனுராசபுரம். |
| 2. | மல்வத்தஓயா .. | 9-12-38 .. | பின் வங்களா. |
| 3. | அபயவெவா .. | 10-12-38 .. | கச்சேரி, அனுராசபுரம். |
| 4. | திசவெவா .. | 10-12-38 .. | சுதேசிய மிஷன் பாடசாலை, அனுராசபுரம். |
| 5. | வெசகிரியா .. | 9-12-38 .. | புராதனக் கட்டடப் பரிபாலன கந்தோர், அனுராசபுரம். |
| 6. | கடைவீதி .. | 9-12-38 .. | நகர சங்கக் கந்தோர், அனுராசபுரம். |

3. 1938 ம் ஆண்டு ஐப்பசிமீ 5 ந் திகதியைக்கொண்ட எமது முந்திய விளம்பரம் இத்தால் ரத்துசெய்யப்பட்டிருக்கிறது.

அனுராசபுரக் கச்சேரி,
1938 ம் ௵ ஐப்பசிமீ 24 ந் உ.

டபிள்யு. ஒ. ஸ்டீவன்ஸ்,
வடமத்திய மாகாண அரசாட்சி ஏசண்டர்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.